# தூது

## காலாண்டு சஞ்சிகை



"இதோ, நான் கதவு அருகில் நின்று தட்டிக்கொண்டிருக்கிறேன்." (வெளி.3:20)

மலர் 01 ஜூலை-செப்ரம்பர் 2006 தூதுரைப்பு 01

# தூது

காலாண்டுச் சஞ்சிகை

விலை ரூ 25/=

மலர்: 01
தூதுரைப்பு : 01
ஜூலை-செப்ரம்பர்.2006


உள்ளே........


**ஆசிரியர் உள்ளத்திலிருந்து**

**மரியன்னையின் இல்லம் மனமாற்றத்தின் மையம்**

**மாணவர் பக்கம்**
(இலங்கைத் திருச்சபை வரலாற்றில் போர்த்துக்கேயர் காலம்)

**தூதுரைத்த தூதுவன் திருமுழுக்கு யோவான்**

**இல்லறம் அது நல்லறம்**
(தந்தையர்களுக்கு)

**கவித்தூது**

**சிறுவர்களுடன் சில நிமிடம்**
(மனிதப்பண்பா? தெய்வப்பண்பா?)

**உவமையில் கதை சொன்னாரா? உலகத்தின் நிலை சொன்னாரா?**

**இறைத்தூதுரைத்தோர்**
(புனித ஆசீர்வாதப்பர்)

**உளவியல்**
(சிறுமையுள் நீங்கிய இன்சொல்)



**ஆசிரியர்**
லோறன்ஸ் கொலிந்திரன்

**நிர்வாகக் குழு**
எஸ். யேசுதாஸ்
ப.யோ.சி. ஆனந்தராஜா
இ.லொ.அ. பெகின்
அ. சிம்சன் போல்
சா. ஞானமலர்

**ஆலோசகர் குழு**
அருட்பணி.அ.லோறன்ஸ்
அருட்பணி.றூபன் மரியாம்பிள்ளை
எஸ்.ஏ. நாதர்


அட்டை வடிவமைப்பு
இ.லொ.அ. பெகின்

பக்க வடிவமைப்பு
ஆ. சியாமினி




"THUUTHU"
28/2, ST.Benedict's Road,
Nallur, Jaffna,
Sri lanka.
Tel:021-2228135
E-Mail:thuuthu2006@yahoo.com

# ஆசிரியர் உள்ளத்திலிருந்து



## அன்பான வாசகர்களுக்கு வணக்கம்



உலகில் அன்று தொடக்கம் இன்றுவரை தூதுப்பணி தொடர்கிறது. "தூதில்லையேல் வாழ்வில்லை" என்பதற்கு இணங்க தூது என்பது எமது வாழ்வில் பிரிக்க முடியாத அளவிற்கு பின்னிப் பிணைந்துள்ளது. ஆரம்பகாலத்தில் புறாவை தூதனுப்பியது தொடக்கம் இன்றைய இணையத்தளம் வரை தூது தொடர்ந்தவண்ணமே உள்ளது. இவ்வாறு துரிதகதியில் முன்னேறிச் செல்லும் நவீன காலகட்டத்தில் "தூது" கிறிஸ்தவ காலாண்டு சஞ்சிகை உங்கள் கைகளில் வந்துள்ளான். இவ்வேளை உங்கள் மனதில் இச்சஞ்சிகை தேவைதானா? இப்போது ஏன் தொடங்கப்பட்டது? என பல கேள்விகள் எழலாம். அக்கேள்விகளை நிவர்த்தி செய்ய வேண்டியது எமது கடமை.

இன்று உலக நாடுகளுக்கிடையில் யார் பெரியவன் என்ற போட்டி உருவாகியுள்ளது. அதன் விளைவாக ஒவ்வொரு நாடும் வல்லரசு ஆவதற்கு முனைந்து கொண்டிருக்கின்றன. அதற்கிணங்க அனேக நாடுகள் பொருளாதாரத்திலும், ஆயுத பலத்திலும் தம்மை உயர்த்துவதற்கு பல இறைவிரோத, மனிதவிரோத நடவடிக்கைகளை எடுக்கின்றன. அதன் தாக்கம் எமது நாட்டையும் விட்டுவைக்கவில்லை.

எமது நாட்டில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழ்நிலையாலும், தரமற்ற தொடர்புச் சாதனங்களின் ஊடுருவலாலும் எம் மத்தியில் சுயநலம் வளரத்தொடங்கியுள்ளது. இதன் விளைவாக கொலை, கொள்ளை, கற்பழிப்பு என சமூகத்தை சீரழிக்கும் பல செயல்கள் எவ்வித இறைபயமின்றி நடைபெறுகின்றது. இதனால் கிறிஸ்தவ விழுமியங்கள் அழிவிற்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே அதை தடுத்து நிறுத்தி இறையரசை கட்டிக்காக்கும் கடமை பொதுநிலையினராகிய எமக்கும் உண்டு. "சிறுதுளி பெருவெள்ளம்" என்பதற்கிணங்க பல அனபர்களின் ஒத்துழைப்புடன் ஒரு துளியாக "தூது" கிறிஸ்தவ காலாண்டு சஞ்சிகை ஒன்றை ஆரம்பித்துள்ளோம்.

இச்சஞ்சிகையானது இறைவனிடமிருந்து பெற்ற திறமைகளை வெளிக்காட்ட சந்தர்ப்பமில்லாது இலைமறை காய்களாக மறைந்திருப்பவர்களை இனங்கண்டு அவர்களிடமிருந்து பெறப்படும் ஆக்கங்களை உங்களிடம் பரப்பும் தூதுப் பணியையே ஆரம்பித்திருக்கின்றது. அத்துடன் இச்சஞ்சிகை மக்களின் ஒரு பகுதியினருக்கு மட்டுமல்லாது சிறுவர்கள், மாணவர்கள், இளைஞர்கள், தாய்தந்தையர் என குடும்பத்திலிருக்கும் எல்லோருக்கும் பயன்படக் கூடியதாக தனது பணியை தொடர முனைந்து நிற்கின்றது.

மேலும் "தூது" ஆனது நாட்டின் ஒரு பகுதிக்கு மட்டுமல்லாது எல்லோருக்கும் ஏற்றவகையில் அவர்களின் கலை, கலாச்சார பண்பாடுகளை உள்ளடக்கியதாக அமையும் என்பதில் ஐயமில்லை. எனினும் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால் முதற் கட்டமாக யாழ் மறைமாவட்டத்தில் தனது பணியை ஆரம்பித்துள்ளது. இனிவரும் காலங்களில் படிப்படியாக ஏனைய பகுதிக்கும் தூது பரவும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

தூது சஞ்சிகையானது தற்போது தான் பிறந்துள்ளது. அதன் வளர்ச்சி உங்கள் ஒவ்வொருவரினதும் கையில்தான் உள்ளது. எனவே அதன் பயணத்தின் போது நல்லவற்றை பாராட்டுவதும், தவறுவிடும் போது அவற்றை சுட்டிக்காட்டி திருத்துவதும் உங்களுடைய கடமையும் பொறுப்புமாகும். எனவே "தூது" சஞ்சிகைக்கு உங்களால் ஆன சகல ஒத்துழைப்புக்களையும் வழங்கி அதன் வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அன்புடன்

லோறன்ஸ் கொலிந்திரன்

# மரியன்னையின் இல்லம் மனமாற்றத்தின் மையம்

## முன்னுரை

வரலாற்றில் இடம்பெற்ற தொடர்ந்தும் இடம்பெற்றுவரும் காட்சிகளில் மரியன்னை வலியுறுத்திவருகின்ற செய்திகளில் மிகவும் அடிப்படையாக விளங்குவது மனமாற்றங்கள் என்பதாகும். எனவே கடந்த காலங்களைவிட நிலமைகள் மோசமடைந்து செல்லும் இன்றைய நாட்களில் மரியன்னையின் திருத்தலங்கள் இந்த செய்தியின் மையங்களாக விளங்குவது அவசியம்.

## 1. மரியன்னையின் பக்தி



கடலோடிகளான போர்த்துக்கேயர் முதன்முதலில் கத்தோலிக்க மறையை இலங்கையின் சுதேசிகளுக்கு அறிமுகப்படுத்திய வேளையில் மரியன்னை பக்தியும் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. தாம் மேற்கொண்ட கடற்பயணங்களில் எதிர்கொள்ளநேரிட்ட ஆபத்துக்களில் சமுத்திரத்தின் நட்சத்திரமாகிய அன்னை மரியாளிடம் அடைக்கலம் புக அவர்கள் அறிந்திருந்தார்கள். இவ்விதமாக தம்மைநோக்கி வந்த பல ஆபத்துக்களில் இருந்து தாம் காப்பாற்றப்பட்ட அனுபவத்தின் காரணமாக தாம் சென்ற இடங்களில் மரியன்னையின் பக்தியை வளர்ப்பது இவர்களின் முயற்சிகளில் ஒன்றாக இருந்தது. இலங்கையில் விசேடமாக வடபகுதியில் மரியன்னையின் பெயரால் இன்று அமைந்துள்ள ஆலயங்களில் பல அன்று போர்த்துகேயர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டவை.

ஒல்லாந்தரின் மறைக்கொடுமைகளால் இடம்பெயர்ந்த கத்தோலிக்க மக்கள் தம்மோடு எடுத்துச்சென்ற சொருபங்களை நெருக்கடிகள் கூடிய வேளையில் மரப்பொந்துகளிலும் நிலத்திலும் புதைத்தும் ஒழித்தும் வைத்து சென்றனர். இதனால் வேறுபட்ட இடங்களில் இந்த ஆலயங்கள் பிற்பட்டகாலங்களில் மீளவும் குடிசை ஆலயங்களாக நிர்மாணிக்கப்பட்டிருக்கலாம். ஆயினும் போர்த்துக்கேயர் காலத்தில் பணிசெய்த யேசுசபை, அகுஸ்தீனார்சபை, பிரான்சிஸ்குசபை, ஆசீர்வாதப்பர் சபையினரின் ஆழமான மரியன்னை பக்தியால் வடபகுதி திருச்சபைக் குழுமங்கள் வளர்ச்சியடைந் திருக்கின்றன. மரியன்னையில் ஆழமான நம்பிக்கை கொன்டிருந்த யோசவாஸ் அருளாளரின் வருகையுடன் ஆரம்பமான மடுத்திருப் பதியின் பணி மையத்தோற்றம் ஆங்கிலேயர் காலத்தில் பல கற்களாலான யாத்திரைத் தலங்களுக்கு வழிவகுத்ததெனலாம்.

விசேடமாக இத்தியான சம்பிரதாயசபைக் குருக்கள் ஏற்படுத்திய மறுமலர்ச்சியைத் தொடர்ந்து வந்துசேர்ந்த ஆங்கிலேயர்கால அமலமரித் தியாகிகள் சபையினரின் தன்னலமற்ற பணியும் மரியன்னை பக்தியை வளர்ப்பது தொடர்பான அச்சபையின் நோக்கமும் பல யாத்திரைத்தலங்கள் உருவாகவும் அவை மனமாற்றத்தின் மையங்களாக நிலைபெறவும் காரணமாகின.

## 2. மரியன்னையின் செய்தி

உலகின் பல இடங்களில் வரலாற்றின் பல வேளைகளில் மரியன்னை காட்சி கொடுக்கின்றாள். உள்ளத்தில் ஏழையர்களாக இருக்கின்றவர்களுக்கு மட்டுமே இக்காட்சிகள் வழங்கப்படுகின்றன. இக்காட்சிகள் அனைத்திலும் அன்னை வலியுறுத்தி கூறுகின்ற ஒரேயொரு செய்தி மனம் திரும்புங்கள் என்பதாகும். இதற்காக அன்னை தன் பிள்ளைகளாகிய நம்மிடம் கேட்டு நிற்பது செபமும் தவமும் ஆகும். லூத்து நகரில், பத்திமாவில், மஜகோரியில், வேளாங்கண்ணியில், இலங்கையின் சிலாபத்தில் எதுவாக இருந்தாலும் அன்னை எம்மிடம் கேட்பது மனமாற்றமே. விசேடமாக பத்திமாவில் வழங்கப்பட்ட செய்தியை ஆழமாக சிந்திப்போமாயின் "உலக மக்களின் பாவங்களால் எனது மகனின் கசப்பான பாத்திரம் (துன்பக்கலம்) நிரம்பி வழிகின்றது. உலகிற்கு என்ன நேருமோ தெரியாது. எனவே செபம் செய்யுங்கள் பாவிகளின் மனம் திரும்புதலுக்காகத் தவம் செய்யுங்கள்." என்னும் செய்தி எமக்கு விடுக்கப்பட்ட பயங்கரமான எச்சரிக்கையாகும்.

## 3. தவம் அவசியம் தேவை

இன்று உலகமக்கள் சாத்தானின் பல்வேறு சூழ்ச்சிகளால் அலைக்களிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். உலகம் பலதரப்பட்ட பாவங்களால் நிறைந்துபோய் உள்ளது. உலகம் தோன்றியதுமுதல் இன்றுவரை பாவங்களின்மேல் பாவம் செய்தவர்களாக இறுதிநேரம் மனந்திரும்புவோம் என இருந்துவிட்டு இறைஇரக்கத்தை சோதித்தவர்களாக மனக்கடினத்திலே இறந்துபோன கோடிக் கணக்கானவர்கள் யாரும் நினைக்காத அந்தரித்த ஆன்மாக்களாக இருக்கின்றனர். நாமும் இவர்களிடையே எதிர்காலத்தில் அங்கத்துவம் பெறக்கூடும். எனவே இறைமிரக்கத்தை வேண்டி செபம்செய்யும்படியும் எமது துன்பங்களை இறுதிவரை இறை சித்தத்தின்படி ஏற்று தவம்செய்யும் படியும் எம்மை தமது காட்சிகளின் மூலம் அன்னை தூண்டுகின்றாள்.

விபச்சாரம், கருத்தடை, கருச்சிதைவு, களியாட்டங்கள், பாலியல் இம்சைகள், என்பவற்றிற்கு விட்டில் பூச்சிகளாக அறியாமையாலும்

இயலாமையாலும் இழுபட்டுப்போய் சீரழிகின்ற இளம் சமூகத்தின் சிற்றின்ப வேட்கை ஒருபுறம் எமது சமூகத்தை அழிவிற்குள்ளாக்குகின்றன. குடும்ப உறவைச் சீர்குலைக்கும் தொலைக்காட்சித் தொடர்களும், விளம்பர மோகமும், கீழ்தர ஆசைகளைத் தூண்டும் சினிமாப்படங்களும், பாடல்களும் பெருகிக்கொண்டே செல்கின்றன. புதிய கண்டு பிடிப்புக்கள் தோற்றுவிக்கும் நவநாகரிக போட்டியால் நுகர்வோர் கலாச்சாரத்துக்கு அடிமையாகும் எமது பகுப்பாய்வற்ற தன்மையும், பெற்றோர் பெரியோர்மட்டில் பிள்ளைகளுக்கு இருக்கவேண்டிய மதிப்பு, மரியாதை, கீழ்ப்படிவு இல்லாமையும், குருபக்தியின்மை, தெய்வ பக்தியின்மையும் வாழ்வின் மதிப்பீடுகளை குழிதோண்டி புதைக்கின்றன.

இதேவேளை உலகநாடுகளில் கடந்த காலங்களில் போட்டிகள் பூசல்கள் ஏற்படுத்திய பல போர்கள் தற்போது நவீன ஆயுதப்பெருக்கத்தால் அணு ஆயுதப்போராக மாறும் அளவிற்கு வளர்ந்துள்ளது. பல உள்நாட்டுப்பிச்சனைகள் பெரும் மோதலாக வெடிப்பதன் காரணமாக புலம்பெயர்வு, இறப்பு, சொத்தழிவு போன்றவையால் மக்கள் உடல், உள ரீதியாக பாதிக்கப்படுகின்றனர்.

எமது நாட்டில் நீண்டு செல்லும் போரானது அடிப்படையில் மக்களின் இறைநம்பிக்கையை வெகுவாக சிதைத்து சுயநலனும் அவநம்பிக்கையும் கொண்ட ஒரு புதிய சமுகத்தை தோற்றுவிக்கும் அபாயம் காணப்படுகிறது.

இவ்வாறு மரியன்னையின் "மகனின் துன்பக்கலம் உலக மக்களின் பாவங்களால் நிரம்பி வழிகின்றது" என்னும் வார்த்தை உண்மையாகின்றது."

**4. செபம் அவசியம் தேவை**

மரியன்னையின் செய்தியின் பயங்கர விளைவை தவிர்க்க வேண்டுமென்றால் உலக மக்கள் அனைவரும் அவளது வேண்டுகோளுக்கிணங்கி மனம் திரும்புவது மிகமிக அவசியமாகின்றது. ஏனெனில் உலகில் எந்த நாடுகளை எடுத்துக்கொண்டாலும் எந்த குடும்பங்களை நோக்கினாலும் தனிப்பட்ட ஒரு சில தனிமனிதர்கள் மேற்கொள்கின்ற தவறான தீர்மானங்களே பல மனிதர்களின் அழிவிற்கு காரணமாகின்றன.

எடுத்துக்காட்டாக எமது நாட்டின் போர்ச்சூழலுக்கு அடிப்படை காரணம் கடந்த நூற்றாண்டு முதல் இன்றுவரை ஒருசில தனிப்பட்ட மனிதர்களின் தவறான தீர்மானங்களாகும். இவை ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களின் இறப்பு சொத்தழிவு இடம்பெயர்வுக்கு காரணமாகின்றன. இதேபோல் எமது குடும்பங்களில் தாய் தந்தை பிள்ளைகள் மேற்கொள்ளும் தவறான தீர்மானங்கள் பல குடும்பச் சீர்குலைவுக்கு காரணமாகின்றன. ஆவியின்

துணையாலேயே சரியான தீர்மானங்கள் எடுக்கமுடியும். இதற்கு மனமாற்றம் தேவை என்ற மரியாளின் வேண்டுகோளை நிறைவேற்றுவது அவசியமாகின்றது. இந்த மனமாற்றம் உருவாக செபமும் தவமும் அவசியம். நாம் செபிப்பதற்கு அவள் கொடுத்திருக்கும் மிகப்பெரிய ஆயுதம் செபமாலை ஆகும். இதைவிட பத்திமாவில் மரியன்னையின் காட்சிக்காக பிள்ளைகளை தயார்படுத்திய வானதூதர் பாத்திரத்தில் நற்கருணையை ஏந்தி வந்து அந்தரத்தில் வைத்துவிட்டு பிள்ளைகளுடன் சேர்ந்து நற்கருணையை ஆராதித்து "ஓ என்யேசுவே" என்ற செபத்தை கற்றுக்கொடுத்தார். இதிலிருந்து நற்கருணை முன் செபிப்பதன் அவசியம் எமக்கு புலனாகிறது.

## 5. மனமாற்ற மையங்கள்

தற்போதைய போர் நெருக்கடிகள் மத்தியில் பேச்சு வார்த்தை இடம்பெறாதா என்ற ஏக்கத்தோடு ஆவல் கொண்டு காத்திருக்கும் கத்தோலிக்கர் "இறைவனின் சக்தி" மீது நம்பிக்கையற்ற ஒரு நிலையிலேயே காணப்படுகின்றனர். பேச்சு வார்த்தை நடைபெறாதா என்று ஏங்குகின்ற நாம் ஒன்று கூடி செபிக்க மறந்துவிடும் அளவிற்கு அவநம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக தோன்றுகிறது. ஆலயங்கள், பங்குகள், மறைகோட்டங்கள், மறைமாவட்டங்களில் தொடர் செபதவ முயற்சிகளை முன்னெடுக்க முடியாதவர்களாக காணப்படுகின்றோம். செபவாழ்வை தவவாழ்வை தொடர்வாழ்வாக்க அடிப்படை "மனமாற்றம் ஒன்று அனைவர் மத்தியிலும் தேவை.

வரலாற்றில் தோன்றிய பல யாத்திரைத்தலங்கள் விசேடமாக இனமத வேறுபாடின்றி மக்கள் எல்லோரும் கூடிவருகின்ற மனமாற்றத்தின் இல்லங்கள் ஆகின்றன. இந்த யாத்திரைத்தலங்கள் இறையருள் பெருகும் இல்லங்களாகும். இங்குவருகின்ற பெரும் பான்மையான மக்கள் மனம் வருந்தி கண்ணீர் சொரிந்து பாவவாழ்வை விட்டு மனம் திரும்புவோம் என்று உறுதியான தீர்மானத்துடன் நல்ல பாவ அறிக்கை செய்து மனமாற்றம்பெற உந்தித்தள்ளப் படுகின்றார்கள். நாம் புதுவாழ்வு வாழ்வதற்கு இறைவனின் இரக்கமும் மரியன்னையின் பரிந்துபேசுதலும் நிறைவைக் கொடுக்கும் என்ற முழு நம்பிக்கையையும் இவர்கள் பெறுகின்றனர். அயலவரோடு ஒப்புரவாகுவதற்கு தீர்மானம் எடுத்து அதை செயற்படுத்த அன்னையின் வாழ்வை தியானித்து ஊக்கம் பெறுவதானது சமாதானத்தின் கருவிகளாக வாழ அழைப்புப் பெறுவதாகும்.

முடிவுரை

அனைத்தையும்விட இந்த யாத்திரைத்தலங்கள் அருள் பெருகும் இடங்களாக காணப்படுவதால் (இன மத பேதமின்றி மக்கள் பெருமளவு இங்கு வருவதால்) இவை மனமாற்றத்தின் இல்லங்களாக காணப்படுகின்றன. எனவே மனமாற்றத்தின் மையங்களாக இவை தொடர்ந்தும் பேணப்படுவது அவசியம். இந்த வகையில் யாழ் மறைமாவட்டத்தில் அமைந்துள்ள மரியன்னையின் யாத்திரைத்தலங்களும் ஏனைய பெருமளவில் மக்கள் கூடுகின்ற தலங்களும் இக்கால போர்ச்சூழலில் அமைதிதேடுகின்ற, ஆன்மீகதேடலை மேற்கொள்கின்ற மக்களுக்கு மனமாற்றத்தின் ஒப்புரவின் பாவ அறிக்கையின் பாவமன்னிப்பின் மையங்களாக திகழவேண்டியது அவசியமான வரலாற்றுத்தேவையாகும்.

– அருட்பணி அன்ரனிபாலா

## யூபிலிநாயகனை வாழ்த்துகிறோம்



திருச்சபை என்னும் திராட்சைத்தோட்டத்தில் நற்பணியாளனாக தன்னை அர்ப்பணித்து குருத்துவத்தின் மேன்மை காத்து பல பணித்தளங்களில் பங்குத்தந்தையாக விளங்கி ஆயர் நிலைக்கு உயர்த்தப்பட்ட யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தனது 25 ஆவது ஆண்டு நிறைவு விழாவை இம்மாதம் (30.07.2006) கொண்டாடுகிறார்.

இந்த மகிழ்வில், தூதுரைக்கும் தூதுவனுக்கு "தூது" சஞ்சிகை தூய்மைசேர் நல் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றது.

வாழ்விலும், ஆன்மீகத்திலும் பல சவால்கள் நிறைந்த எமது பிரதேச மறைமாவட்டங்களில் 25 ஆண்டுகள் துணிவுடனும், நேர்மையுடனும், எதிர்நோக்குடனும் தமது மந்தைகளை இறைவழி நடத்திச் செல்கிறார். சமாதானத்தை வலியுறுத்தி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல அரசியல் ஆன்மீக தலைவர்களை சந்தித்து அமைதிக்கான தேவையை உணர்த்தும் அன்புத் தூதவனாக செயலாற்றுகிறார்.

தமது இறைமக்கள் மீது மிகுந்த கரிசனையும், பிற மதங்களோடு நல்லிணக்கமும் கொண்ட பண்பாளனாக, மாமேதையாக, அடக்கமும், செயல்வீச்சும், மறைப்பேச்சும் நிறை ஆயனாக விளங்கும் யாழ் ஆயரின் யூபிலி நிறைவினில் இறைவனின் நிறை ஆசீர் பெற்று பல்லாண்டுகள் திருமறையை வழிநடத்த தூயோனின் துணைவேண்டி "தூது" சஞ்சிகை வாழ்த்தி நிற்கின்றது.

## மாணவர் பக்கம்

# இலங்கை திருச்சபை வரலாற்றில் போர்த்துக்கேயர் காலம்

இலங்கையில் ஆரம்ப காலங்களில் கிறிஸ்தவர்கள் இருந்தமைக்கான வரலாற்றுக் குறிப்புக்கள் பல இருக்கின்ற போதிலும் போர்த்துக்கேயரின் வருகையுடன்தான் இலங்கைத் திருச்சபை வரலாறு ஆரம்பமாகிறது என பொதுவாகக் கூறுவர். டோம் லொறென்ஸோ டி அல்மெய்டா தலைமையிலான போர்த்துக்கேயர் படை கி.பி 1505ம் ஆண்டு கார்த்திகை திங்கள் 15ம் திகதி கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தனர். அவர்களுடைய வருகையின் முதன்மையான நோக்கம் வர்த்தகமாகவே அமைந் திருந்தது. எனினும் கத்தோலிக்க திருச்சபையின் தலைமையோடு செய்து கொண்ட "பத்ரோ அதோ" உடன்படிக்கையின் அடிப்படையில் மறைபரப்பு பணிகளில் ஈடுபட்டார்கள்.

போர்த்துக்கேய படைகள் இலங்கை வந்தபோது இங்கு நிலவிய அரசியல் பின்னணியானது, இலங்கை மூன்று இராட்சியங்களாக பிளவுபட்டிருந்தது.

1. கோட்டே இராட்சியம்
2. கண்டி இராட்சியம்
3. யாழ்ப்பாண இராட்சியம்



**கோட்டே இராட்சியம்**

போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது கோட்டே இராட்சியத்தை 9ம் தர்மபராக்கிரமபாகு ஆட்சி செய்து வந்தான். அவன் கோர்த்துக்கேயருக்கு பயந்து அவர்களோடு சமாதன ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டான். 1520ம் ஆண்டு தர்மபராக்கிரமபாகுவின் மகன் விஜயபாகு தந்தையை கொலைசெய்து ஆட்சியை கைப்பற்றினான். அவன் இஸ்லாமியரோடு சேர்ந்து போர்த்துக்கேயரை எதிர்த்தான். அவன் போர்த்துக்கேயரால் தோற்கடிக்கப்பட்டதன் விளைவாக தந்தை போர்த்துக்கேயருடன் செய்துகொண்ட உடன்படிக்கையை புதுப்பித்துக் கொண்டான்.

கி.பி 1521ல் விஜயபாகுவை கொலை செய்தஅவருடைய புதல்வர்கள் மூவரும் ஆட்சியை தமக்கிடையே பங்கிட்டுக் கொண்டனர். அந்தவகையில் கோட்டேயை 7ம் புவனேகபாகுவும், சீதவாக்கையை மாயதுன்னவும், றைகமவை பரராஜசிங்கனும் ஆட்சி செய்தனர்.

கோட்டே அரசன் 7ம் புவனேகபாகு தம் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் மறைப்பணியை மேற்கொள்ள மறைபரப்பாளர்களை கோரியதன் விளைவாக 1543ம் ஆண்டு பிரான்சிஸ்கன் சபையைச் சார்ந்த குருக்கள் இங்குவந்து தம் மறைபணியை ஆரம்பித்தனர். புவனேகபாகுவின் மரணத்தின் பின் கோட்டேக்கு அரசனான தர்மபாலா 1556ல் திருமுழுக்கு பெற்றுக்கொண்டார். அத்துடன் அரசன் கத்தோலிக்க குருக்களுக்கு அரச நிலங்களையும், நிதிகளையும் வழங்கி உதவி செய்தான்.

1597ம் ஆண்டு தர்மபாலா இறந்ததை தொடர்ந்து கோட்டே அரசு போர்த்துகேய அரசன் முதலாவது பிலிப்பின் ஆட்சியின்கீழ் வந்தது. இவ்வாறாக கோட்டே அரசில் கிறிஸ்தவம் பரவி வளர்ச்சியடைந்தது.

**கண்டி இராட்சியம்**

போர்த்துக்கேயர் இலங்கை வந்த காலத்தில் கண்டி அரசை ஜெயவீர என்னும் வீரவிக்கிரமபாகு ஆண்டு வந்தான். அவன் சீதவாக்கை அரசன் மாயதுன்னவிடமிருந்து கண்டியை பாதுகாக்கும் நோக்குடன் போர்த்துக்கேயரோடு ஓர் உடன்படிக்கையை செய்து கொண்டதோடு கிறிஸ்தவத்தை போதிக்க மறைபரப்பாளர்களுக்கு அனுமதியும் வழங்கினான். அத்துடன் ஒரு தேவாலயத்தையும் தங்குமடத்தையும் கட்ட நிலத்தை வழங்கினான். எனினும் அவன் பின்னர் போர்த்துக்கேயருக்கு வழங்கிய அதரவை விலக்கிக் கொண்டதோடு அவர்களை எதிர்க்கத் தொடங்கினான். இதனை விரும்பாத அவன் மகன் கரலியட் பண்டார தந்தையை அங்கிருந்து விரட்டி 1550ல் ஆட்சியை கைப்பற்றினான். அத்துடன் அவன் போர்த்துக் கேயருக்கும் மறைபரப்பாளருக்கும் ஒத்துழைப்பு வழங்கினான்.

1581ல் மாயதுன்ன இறந்ததைத் தொடர்ந்து சீதாவாக்கையின் அரசனான ராஜசிங்க 1582ல் கண்டியரசை கைப்பற்றினான் அவன் கிறிஸ்தவர்களை துன்புறத்தினான். வேதனை பொறுக்க முடியாத மக்கள் டொன்பிலிப்புவை தங்கள் அரசனாக்க விரும்பினர். எனவே அவன் போர்த்துக்கேயப் படையின் உதவியுடன் கண்டியைக் கைப்பற்றி ஆட்சி செய்தான் இதனால் மறை போதகர்கள் மீண்டும் தம் பணியை ஆரம்பித்தனர்.

**யாழ்ப்பாணம் இராட்சியம்**

போர்த்துக்கேயர் இலங்கை வந்த போது யாழ்ப்பாண இராட்சியத்தை அங்கலி என்னும் ஜெகராசசேகரன் ஆண்டு வந்தான். அக்காலத்தில் யாழ்ப்பாண இராட்சியத்தின் ஒருபகுதியாக இருந்த மன்னாரில், இந்தியாவில் இருந்து வந்த யுவான் டி லிஸானோ அடிகளார் நற்செய்தியை போதித்து 700 பேரை மனந்திருப்பினார். இதனை அறிந்து ஆத்திரம் கொண்ட சங்கிலி மன்னன் மன்னாருக்கு சென்று மனந்திரும்பிய கிறிஸ்தவர்களையும், அடிகளாரையும் கொலைசெய்தான் இவ்வாறு வேதத்திற்காக மரித்தவர்கள் "மன்னார் மறைசாட்சிகள்" என அழைக்கப்படுகின்றனர். இதற்குப் பழிவாங்கும் நோக்குடன் 1560ம் ஆண்டு போர்த்துக்கேயர் படையெடுப்பை மேற்கொண்டு சங்கிலி மன்னனின் ஆட்சியை தம் கட்டுப்பாட்டின் கிழ் கொண்டுவந்தனர். பிரான்சிஸ்கன் சபையை சேர்ந்த மறைபரப்பாளர்கள் சுதந்திரமாக மறைபணியில் ஈடுபட்டு பலரையும் மனந்திருப்பினர்.

## இந்நாட்டின் போர்த்துக்கேயர் மறைதூதுப்பணி வெற்றியாக அமைந்த காரணங்கள்

**முதலில் அரசர்களையும், அதிகாரிகளையும் மனந்திருப்புவதில் கவனம் செலுத்தியது.**

**ஒரு குழுவினரை, கூட்டத்தினரை மனந்திருப்ப முயற்சியெடுத்தது.**

**திருமுழுக்கு சடங்குகளையும், வழிபாடுகளையும் ஆடம்பரமான முறையில் நிறைவேற்றியது**

**பௌத்த, இந்து பழக்கவழக்கங்களை ஏற்று பின்பற்றியமை.**

**கல்வி. சுகாதார, பிறர்நலச் சேவைகளில் ஈடுபட்டமை.**

**எளிமையான வாழ்வை மேற்கொண்டு கிராமப்புற மக்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்தமை.**

**சுதேசமொழியை கற்று அதனூடாக மறையை போதித்தது.**

**த. றங்கநாயகம்**
**ஆசிரியர் யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்**

# தூதுரைத்த தூதுவன் திருமுழுக்கு யோவான்

உலகில் மனித இனம் உருவாக்கப்பட்ட நாள் முதலாக தகவல்கள், கருத்துக்கள், சம்பவங்கள், கட்டளைகள், போதனைகளை வெளிப்படுத்தும் தூதுப்பரிமாற்றங்கள் பல வழிகளில் பின்னற்றப்பட்டு வருகின்றன. செய்தி ஓலைகள், ஒலிஎழுப்புதல். ஒளிகாட்டுதல், புகை எழுப்புதல், ஓடிச்சென்று அறிவித்தல், கல்வெட்டுக்கள், பறவைகள் என்பன முற்காலத்திலும், செய்திமடல்கள், அச்சு ஊடகசெய்திதாள்கள், வானொலி, தொலைக்காட்சி, இலத்திரனியல் ஊடகங்கள் என பிற்காலத்திலும் மக்கள் தொடர்பாடல் சாதனங்கள் பரிணமித்தன. இவையனைத்தும் ஒரு வரையறுக்கப்பட்ட உலக அண்டவெளி எல்லைக்குட்பட்ட தூதுரைப்பு முறைகளாகும்.

தூதுரைப்பு என்பது தாம்கண்டதையும் அறிந்ததையும், அறிவுறுத்தப்பட்டதையும் தம்சொந்த கருத்துக்களை புகுத்தாது, அப்படியே அடுத்தவருக்கு பல வழிகளிலும் கொடுப்பதாகும். திருமறையின் உருவாக்கத்துக்கும், வளர்ச்சிக்கும், நிர்வகிப்புக்கும் "தூது" முறை மிகவும் கைகொடுத்து வருகிறது என்பதில் ஐயமில்லை.

ஆதி, அந்த, எல்லையற்ற இறைவன் தன் நற்செய்திகளை, திட்டங்களை, வழிகாட்டல்களை மக்களுக்கு வெளிப்படுத்த காலத்துக்குக் காலம் மனிதர்களைப் பயன்படுத்தினார். மனித ஊடகமாக பிதாப்பிதாக்கள், இறைவாக்கினர், மறைப் பணியாளர்களை தூதுவர்களாக தெரிந்து கொண்டார்.

இந்த அழைப்பின் வரிசையில் "பாலைவனப் போதகரான" திருமுழுக்குயோவான் தூதுரைப் பணியில் சிறந்த பங்காற்றியுள்ளார். இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாக ஆண்டவருக்கு ஏற்புடைய மக்களினத்தை தயார்ப்படுத்தும் முன்னோடித் தூதுவனாக கருவிலேயே தூயஆவியால் நிரப்பப்பட்டவராக இறைவன் யோவானை உருவாக்கினார். இவர் எலிசபெத்தின் கருவில் உருவானபோதும், பிறந்த நேரத்திலும் அதிசய நிகழ்வுகள் இடம்பெற்றன. இதனால் இக்குழந்தை எப்படிப் பட்டதாய் இருக்குமோ? ஆண்டவருடைய கை வன்மையை நிரம்ப பெற்றிருக்கிறது. (லூக் 1:66) என்று பேசப்பட்டது.

இயேசுவுக்கு ஆறுமாதங்கள் மூத்தவரான யோவான், இயேசு தன்னை உலகிற்கு வெளிப்படுத்தும்வரை யூதேயா பாலை நிலத்தினூடாக பயணிப்போருக்கு

‘மனம் மாறுங்கள் ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்து விட்டது” (மத் 3:2) என்று தூதுரைத்து திருமுழுக்கு வழங்கி வந்தார்.

பழையவாழ்வின் கடின உள்ளங்களை மாற்றி சினத்திலிருந்து தப்பிக்க உங்கள் மனமாற்றத்தை செயலில் காட்டுங்கள். நீங்கள் நற்கனி தராவிட்டால் வெட்டப்பட்டு தீயில் போடப்படுவீர்கள் எனவே உங்களுக்கு உரியவற்றை இல்லாதோருடன் பகிர்ந்து கொள்ளுங்கள், அநீதி புரியாதீர்கள், பொய்க்குற்றம் சுமத்தாதீர்கள், எதிலும் திருப்தி கொள்ளுங்கள்.

எனக்குப்பின் வருபவர் தூய ஆவியால் திருமுழுக்கு கொடுப்பார். அந்த வலிமைமிக்கவரின் பாதணிகளைக் களற்றவும் எனக்குத் தகுதியில்லை. உங்கள் நற்செயலுக்கேற்ற நிறை விளைச்சலை பரலோக இராட்சியத்தில் சேர்ப்பார். தீய பதரான செயல் விளைவித்தோரை அணையா நெருப்பிலிட்டுச் சுட்டெரிப்பர் என தூது முழக்கமிட்டார்.(லூக் 3:7–14)

நான் மெசியா அல்லேன். அவருக்கான வழியை செம்மைப்படுத்த வந்த தூதுவன் என்று தன்னைத் தாழ்த்தி சான்று பகர்ந்தார். இவரது தூதுரைப் பணிகளையிட்டு “மனிதராகப் பிறந்தவர்களுள் யோவானைவிட பெரியவர் ஒருவருமில்லை(லூக் 7:28) இது யேசு கூறிய அறிக்கை.

கிறிஸ்தவ விழுமியங்களை பிறருக்கு எடுத்தியம்பி அதன்படி வாழும் பொறுப்பும், கடமையும் திருமுழுக்கின் வழியாகஎமக்கு தரப்பட்டுள்ளது. இக்கடமையை சரிவர செயற்படுத்துகிறோமா? எமது பாதை ஆண்டவரின் வழிகளை செம்மைப்படுத்தும் வாழ்வாக அமைகிறதா? யோவானிடம் காணப்பட்ட நீதியும், நேர்மையும் தவறுகளை சுட்டும் துணிவும் எம்மில் வளர வேண்டும் .

இன்றைய நவீன ஊடகங்கள் பல்வேறு தூதுரைப்புகளை மேற்கொள்ளுகின்றன. பகை, பொறாமை, பழிக்குப்பழி, காழ்ப்புணர்வு, மோதல்கள், குடும்ப பிணக்குகளை கருவாக வைத்து காண்பியலில் ஈடுபடுகின்றன. சில நிகழ்வுகளில் நன்னெறிகளும், படிப்பினைகளும், யதார்த்தங்களும் இழையோடி நிற்கின்றன. இவற்றில் நாம் எவற்றை கருத்தில் எடுக்கின்றோம் என்பதுதான் முக்கியமானது. ஊடகத்தூது என்பது மனிதனுக்கு நன்மை பயப்பதாக அமையவேண்டும்.

தூய திருமுழுக்கு யோவான் தனித்தூதுவனாக நின்று உண்மை வழியில், நீதி வாழ்வில் வாழ மக்களை அழைத்தார். தவறுகளை சுட்டிக்காட்ட ஒருபோதும் தயங்க வில்லை. ஏரோது மன்னன் முறைதவறிய உணர்ச்சிக்கு

அடிமையானபோது துணிந்து குற்றத்தை சுட்டிகாட்டினார். அதன் விளைவாக ஏரோதியாளின் வஞ்சத்தினால் சிரச்சேதம் செய்யப்பட்டார். இடர்கள், துன்பங்கள், பாடுகள் பட்டபோதும் இறுதிவரை தூதுரைப்பணியில் நின்று இம்மியளவும் அவர் பின்வாங்கவில்லை.

பிறப்பு விழா ஜூன் 24
நினைவு விழா ஆகஸ்ட் 29

பல்வேறு சந்தர்ப்பங்களில் இறைவன் எமக்கும் பிறருக்கும் தரும் தூதினை தகுந்த முறையில் பரப்பிடுவோம். நல்லவற்றை சொல்வோம். சொல்வதை செய்வோம். செயலில் தூய்மை காப்போம். இதுவே நாம் வழங்கும் நற்தூதாக அமையும்.

எஸ்.யேசுதாஸ்

## சிந்தனைக்கு


❖ சோதனை கடலலைகள்போல உன் உள்ளத்தில் எழுந்து உன்னை அச்சுறுத்தினாலும், நீ கடவுள் என்னும் நங்கூரத்தோடு இணைக்கப்பட்டிருப்பாயேயானால் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை.

❖ உலக புகழ்பெற்ற சிற்பி மைக்கேல் ஆஞ்சலோ மோயிசனின் சிலையைச் செதுக்கி முடித்து அதைக் கூர்ந்து நிமிர்ந்து பார்த்தான். அவன் கண்களை அவனாலேயே நம்ப முடியவில்லை. அதைச் செதுக்கிய உளியால் அச்சிலையை குத்தி 'பேசு மோயிசா' என்றான். ஒவ்வொரு மனிதனின் செயலும் முழுமையின் நிறைவாக விளங்கி அவனையே திகைக்க வைக்க வேண்டும்.



# இல்லறம் அது நல்லறம்

## தந்தையர்களுக்கு



ஒரு தந்தை தனது குழந்தைகளுக்குக் கொடுக்கக் கூடிய சிறந்த பரிசு அவரே. சாதாரணமாக தந்தையர்கள் குடும்பத்தினது தேவைகளை நிறைவேற்றுபவர்களாகவே நாம் நோக்குகின்றோம். ஆனால் இப்போது அவர்களுடைய மனைவியரினதும், குழந்தைகளினதும் (பிள்ளைகள்) முழு வளர்ச்சியிலும் தேவைகளிலும் அக்கறையுடன் ஈடுபடுவதையே சமுதாயம் எதிர்பார்க்கின்றது. முன்பு தொழில் ஒரு தந்தைக்கு ஒரு வளமான கருத்தையும் சுயமதிப்பீட்டையும் கொடுத்தது. தந்தை உழைக்கும் ஊதியத்தை வீட்டுக்குக் கொண்டு வருதல் தந்தையின் பணியாகவும், வீட்டில் பிள்ளைகளைப் பராமரிக்கவும் சமையல் செய்து உணவு கொடுப்பதும் தாயின் பணியாகவும் இருந்தது. இப்பொழுது தந்தை எல்லா பிள்ளைகளையும் எல்லா விதத்திலும் கரிசனையுடன் பராமரிக்கும் பணியை செய்ய வேண்டுமெனத் தற்போதைய குடும்பம் எதிர்பார்க்கின்றது.

தந்தைப்பாக்கியம் (fathering) என்பது ஒவ்வொரு தந்தைக்கும் தனித்துவமானது.

ஒரு பரம்பரைக் குடும்பத்தில் அம்மாவும் அப்பாவும (mom and dad) குடும்பத்தின் வேலைகளின் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்ளுகின்றனர். ஒவ்வொரு தந்தையும் தனது பாத்திரத்தை அணுகுகின்ற முறை வேறுபட்டதாய் அமைகிறது. தனதுவீட்டிலிருந்து வெகுதூரத்தில் வேலை செய்யும் தந்தையின் அனுபவமும், வீட்டிலிருந்து வேலை செய்யும் தந்தையின் அனுபவமும் வேறுபட்டதாக இருக்கிறது. தமது வேலைகளில் காத்திரமாக இருக்கும் தந்தையருக்கு பரிசுகளை விட சவால்களே அதிகம்.

- முதல் முறை ஒரு தந்தை தன் குழந்தையால் பல இன்னல்களை அனுபவிப்பார். ஆயினும் நினைத்துப் பார்க்க முடியாதபடி அன்போடு குழந்தையை பராமரிப்பார்.
- குழந்தை நடக்கத் தொடங்கும் போது அவருடைய பாதுகாப்பை தந்தை கவனிக்க வேண்டியவராக இருப்பர். தந்தைமார் எப்போதும் வரையறைகளை ஏற்படுத்தி தம் பிள்ளைகளை சுய கட்டுப்பாட்டுடன் வளர உதவுவர்.

❖ பிள்ளைகள் பள்ளிக்கூடம் செல்லும் நிலையில், தந்தையானவர் தனது நேரத்தையும் பணத்தையும் செலவளிக்கும் நிலையில் இருப்பர், இன்னும் அவர்களுடைய விளையாட்டு, இசை போன்ற ஏனைய செயற்பாடுகளில் ஆர்வமுள்ளவராக இருப்பர்.

❖ பிள்ளைகள் வளர்ந்து வாலிபப் பருவமானதும் தந்தையர்கள் வாலிபப் பருவத்திற்கு வழிகாட்டி அழைத்துச் செல்பவராக இருப்பர். இங்கு ஒரு தந்தை தலைவர் என்ற நிலையிலிருந்து இறங்கி பிள்ளைகளின் சுதந்தரமான வாழ்விற்கு ஆலோசகராகவும், அவர்களின் தோழனாகவு மிருந்து செயல்பட வேண்டியவராக இருத்தல் வேண்டும்.

திறந்த, தளர்வான உரையாடலை தம் பிள்ளைகளுடன் தனித் தனியாக ஒவ்வொருவருடனும் பேசுதல் நல்ல பலனைக் கொடுக்கும். இங்கு தான் ஒரு தந்தையானவன் பிள்ளைகளுக்கு விரிவுரை நடத்துவதற்குப் பதில் அவர்களுடன் தன் எண்ணங்களைப் பகிர்ந்து, வழிகாட்டியாக மாற வேண்டியவராகிறார்.

## தந்தைக்குரிய பண்புகள்

ஒரு நல்ல தந்தை வளர்த்துக் கொள்ள வேண்டிய சில பண்புகள் இங்கே இருக்கின்றன.

❖ ஒரு தந்தை அன்பு செய்கின்றார்.

❖ ஒரு தந்தை தன் பிள்ளைகளுக்கு எப்பொழுதும் பிரசன்னமாக இருக்கிறார்

❖ ஒரு தந்தை தன்னைப் பகிர்கின்றார்

❖ ஒரு தந்தை செவிகொடுக்கிறார், கற்பிக்கிறார் அத்துடன் கரிசனையுடன் பராமரிக்கின்றார்.

❖ ஒரு தந்தை உதாரணங்களை கொடுக்கிறார்.

❖ ஒரு தந்தை முன்மாதிரியாக இருக்கிறார்.

❖ ஒரு தந்தை சில வரையறைகளை ஏற்படுத்துகின்றார்

❖ ஒரு தந்தை மன்னிக்கிறார்

❖ ஒரு தந்தை பொறுமையுள்ளவராக இருக்கிறார்.

❖ ஒரு தந்தை தவறிழைக்கின்றார்.

❖ அத்தோடு ஒரு தந்தை தனது எண்ணங்களால் உயிரூட்டுவார்.

யார் விண்ணரசுக்குத் தகுதியானவர்கள் என்று இயேசுவிடம் கேட்டபோது அவர் எவர் பசித்தவருக்கு உணவு கொடுத்து, தாகமாய் இருப்பவருக்கு குடிக்கக் கொடுக்கின்றாரோ, ஆடை இல்லாதவரை உடுத்தி, வீடு இழந்தவருக்கு வீடு கொடுக்கின்றாரோ அவரேதான் என்றார். இவைகள் ஒரு சாதாரண குடும்ப வாழ்க்கைக்கு தேவையானவை. தந்தையர்களே இதை எப்போதும் செய்கின்றனர். ஒரு தந்தை தனது வாழ்வை விண்ணகத்திற்கான பாதையாக அமைப்பதை நினைத்து சந்தோசப்பட்டு திருப்தியடைய வேண்டும். ஒவ்வொரு கணவனும் பின்வரும் கேள்விகளைக் கேட்டு தங்களைத் தாமே மதிப்பீடு செய்துகொள்ள வேண்டும். நான் மிகவும் இலகுவாக விட்டுக் கொடுத்து விடுகின்றேனா? நான் உண்மை சொல்கின்றேனா? நான் பயனுள்ளவனா? நான் அன்பு செய்கிறேனா?

சாதனை புரியும் ஆண்களுக்கும், சாதாரணமான, ஆண்களுக்கும் இடையே உள்ள ஒரு பெரிய வித்தியாசம் என்னவென்றால் சாதனைகள் புரிந்து புகழ்வாய்ந்த ஆண்கள் தம்மைத்தாமே வழிநடத்தக் கூடியவர்களாக உள்ளனர். அவர்கள் தமது கொள்கைகளுக்காக வாழ்கின்றார்கள். "ஒரு குழந்தை தனது தந்தையில் இறைவனுடைய குணங்களைக் காண முடியாது விட்டால், இறைவனில் தந்தையைகாண இயலாது" இவ்வாறு ஒஸ்ரின் சொறென்சன் சொல்லுகின்றார். ஒவ்வொரு குடும்பத்திலும் பெறறோர் தந்தையென்றும், தாய்யென்றும் தம் நடிபாகத்தை ஏற்று வாழ்கின்றனர். இங்கு ஒரு தந்தை அர்ப்பணிப்புடனும், ஆதரவுடனும், அர்த்தமுள்ளவனாகவும். பிள்ளைகளின் மாதிரிகை யாகவும் காட்டுகின்ற பங்கைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும்.

பிரச்சினைகள் நிறைந்த காலத்தில் பிள்ளைகளின் பிரச்சினைகளை தொடர்ந்து கேட்பது அவர்களை வழிநடத்த உதவும். தடுமாறாத அர்ப்பணிப்பு, பக்கபலம், அத்தோடு உதவி என்பன தான் ஒரு தந்தைக்கு தேவை என்பதை காட்டி நிற்கின்றன. செபம் விசுவாசத்திற்கு உரம் ஊட்டும் பெரிய வழியாகும். இது மாற்றமடைந்து விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றன. உண்மையான சில உணர்வுகளுக்கு எம்மை அழைத்துச் செல்கின்றது. அன்பு, பரிவு, அர்ப்பணிப்பு, ஆதரவு, அதே நேரத்தில் செபம் எமது வாழ்வில் ஒவ்வொரு நிலையிலும் தேவைப்படுகின்றது. பெற்றார் தம் பிரச்சினைகளுக்காகவும் பிள்ளைகளின் நல்வாழ்வுக் காகவும் செபிக்க வேண்டியவராக இருப்பர். "இறைவா நீரே எங்கள் தந்தை, நாங்கள் களிமண், நீர் எங்களை வனைபவன் நாங்கள் அனைவரும் உம் கைவேலைப்பாடுகள்".

## ஒரு தந்தையின் செபம்

பரோலகத்தில் இருக்கும் எங்கள் தந்தையே நான் இந்த உலகத்தில் ஒரு தந்தை. நீர் எனக்கு இந்தப் பரிசையும், பொறுப்புக்களையும் தந்துள்ளீர். இதை நான் எடுத்துச்செல்ல ஞானத்தை அருளும். எனது தந்தைநிலை எதிர்பார்ப்புக்கள் அதிகாரங்களாக இல்லாது தட்டிகொடுப்பதாகவும், ஆதரவளிப்பதாகவும் அமையட்டும். எனது குழந்தைகளை பாதுகாக்க வரமருளும். ஆனால் அறிவுரைகளை அதிகமாக வழங்கமட்டுமல்ல, குழந்தைகள் எனது பகுதியாகவும் அல்ல, மாறாக தனித்துவமானவர்கள் என எண்ணி அவர்களை மதிப்பளிக்க வரம்தாரும். எனது கோபம், ஏமாற்றங்கள், காயங்கள்,தடுமாற்றம், மகிழ்ச்சி மற்றும் அன்பு என்பவற்றிலும் எனது குழந்தைகள் மட்டில் எனது உணர்வுகளில் நான் நேர்மையாக இருக்க அருளும். மேலோங்கிய நிலையிலல்ல, நான் உறுதியாக இருக்க அருள்தாரும். அவர்களது உணர்வுகளை மாற்றுவதை விடுத்து புரிந்துணர்வு உடையோராய் இருக்கவும் அருளும். நான் தேவையான போது அவர்களோடு இருக்கவும், தேவையில்லாத போது அவர்கள் பாதையிலிருந்து விலகவும் அருளும். அவர்கள் எம்மவர்கள் என்ற உணர்வையும், ஞானத்தையும் நான் ஊட்ட அருளும். வானத்திலிருக்கும் தந்தையே பூமியில் நான் நற்தந்தையாக இருக்க உதவியருளும்.

– அருட்பணி S.J. இராஜநாயகம்

## தெரிந்து கொள்ள

### பதினாறு செல்வங்கள்

பதினாறும் பெற்று பெறுவாழ்வு வாழ்க என்று திருமணத் தம்பதியை வாழ்த்துகின்றோம், அவை என்னவென்று தெரிந்து கொள்ள வேண்டுமல்லவா?

மனை, மனைவி, மக்கள், காய், நெல், நீர், நிலம், கால்நடை, கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், வலிமை, பொன், போகம், புகழ் என்பனதான் அந்தப் பதினாறு செல்வங்கள்.



# கவித்தூது

## யாருக்கு யார் தூது

உண்மையை உரைத்திடும் தூது
செய்தியை பரப்பிடும் தூது
மனிதத்தை எழுப்பிடும் தூது
புனிதத்தை காத்திடும் தூது
மெஞ்ஞானத்தை உணர்த்திடும் தூது
தன்னலத்தை அகற்றிடும் தூது

பகைமைக்கு அன்பு தூது
மேன்மைக்கு நாவடக்கம் தூது
வறுமைக்கு ஈகை தூது
வெறுமைக்கு நிறைவு தூது
மடமைக்கு அறிவு தூது
மறுமைக்கு நற்செயல் தூது

வன்முறைக்கு அமைதி தூது
சிறைக்கு விடுதலை தூது
ஒடுக்குமுறைக்கு உரிமை தூது
பசிக்கு உணவு தூது
கோழைக்கு வீரம் தூது
பொய்மைக்கு வாய்மை தூது

தனிமைக்கு அரவணைப்பு தூது
விரக்திக்கு தன்னம்பிக்கை தூது
மழைக்கு வரட்சி தூது
நாளைக்கு இன்றைய நாள் தூது
மனிதனுக்கு இறைவன் தூது
இறைவனை மறந்தால் வாழ்வு ஏது?

சுபீட்சன்

## நல்லோர்க்கு ஆயுதம்

கனவுகள் தானே
கவலைகளின் காதலன்
கற்பனைகள் தானே
அற்பர்களின் நண்பன்
நம்பிக்கை தானே
நல்லோர்க்கு ஆயுதம்
துரோகம் தானே
துட்டர்க்கு அணிகலன்
வஞ்சகம் தானே
வள்ளல்க்கு எதிரி
நேர்மை தானே
அன்புள்ளோர் கேடயம்

குரோதம் தானே
கயவர்க்கு விழிகள்
விரோதம் தானே
பொல்லாரின் வழிகள்
உண்மை தானே
உயர்ந்தோர் அறம்
எதிர் நீச்சல்தானே
வெற்றிக்கு அழகு
எதிரியை மன்னித்தல்
நல்லோர்க்கு அரண்
எதற்கும் அஞ்சாமை
நடுவரின் நன்னயம்

ஜோ. ஜெஸ்ரின்

## சிறுவர்களுடன் சில நிமிடங்கள்



### மனிதப் பண்பா? தெய்வப் பண்பா?

ஒரு நாள் காலை நேரம் அண்ணல் காந்தியை காண ஒருவர் வந்தார். வந்தவர் ஒரு தொழுநோயாளர். அவர் கைகளும் கால்களும் புண்களால் அழுகிக் கிடந்தன. அவற்றிலிருந்து சீழ் கசிந்தது. துர்நாற்றம் வீசியது. அருவருக்கத் தக்க தோற்றம். ஆயினும் அண்ணல் காந்தி மனிதப்பண்பை முன் கொண்டு அவரை இன்முகம் காட்டி வரவேற்றார். வந்தவர் பரிசுப்பொருள் ஒன்றை அண்ணலுக்கு கொண்டு வந்திருந்தார். சீழ் வடியும் கைகளில் அந்தப் பொருள் காட்சி அளித்தது.

பரிசுப்பொருள் என்ன தெரியுமா? அவர் கையால் நூற்ற கதிராடை. வந்தவர் அண்ணலுக்கு அன்போடு கொடுத்தார். அவரும் பெருமிதத்தோடு பெற்றுக்கொண்டார். அவரது கடமை உணர்வை பாராட்டினார். வந்தவர் விடைபெற்றுத்திரும்பினார். ஆனால் காந்தியடிகள் அவரை விட்டுவிடுவாரா என்ன?

தேடிவந்த தொழுநோயாளரை அன்போடு உள்ளே அழைத்துச் சென்றார். அவர் புண்களை தானே கழுவினார் மருந்து கட்டினார். அவர் வேதனையில் ஆறுதல் கண்டு மகிழ்ந்தார்.

அவருக்கு உண்ண உணவளித்தார் செய்வதற்கு தொழில் கொடுத்தார் தன்னுடனேயே வைத்துக்கொண்டார். பிணியின் வேதனையிலும் தொழுநோயாளி அமைதியுடனும், நிறைவுடனும் வாழ்ந்தான்.

பிள்ளைகளே காந்தியடிகளின் வாழ்வில் அவர் எதிர் கொண்ட சம்பவத்தை போன்ற நிகழ்வுகளை நீங்களும் எதிர் கொண்டால் எப்படி நடந்து கொள்வீர்கள் என்று சற்று சிந்தியுங்கள்.

**படிப்பினை:-** மனித உயிர் மாண்புமிக்கது. அதனை நாம் எந்த நிலையிலும் மதித்து பேணவேண்டும். அது வீணே அழிவிற்குரிய தல்ல மாறாக வாழ்விற்குரியது. எனவே ஏழைகள், பிணியாளர், அனாதைகள், அகதிகள், வலுவற்றோர் மட்டில் நாம் இரக்கமும் அன்பும் உடையவர்களாக இருக்கவேண்டும். அண்ணல் காந்தியிடம் விளங்கியது சாதாரண மனிதப் பண்புகளுக்கெல்லாம் மேற்பட்ட தெய்வப் பண்பே.

## கடுகுக்கதை

ஒரு நண்டுக்கு நான்கு குட்டிகள். குட்டிகள் ஓரளவு வளர்ந்து பெரியவர்களானதும் அவர்களை பயிற்சியில் ஈடுபடுத்த முயன்ற தாய் நண்டு, "பிள்ளைகளே இன்றுமுதல் உங்களுக்கு பயிற்சி தரப்போகின்றேன் நாளை மாலை நான்கு மணிமுதல் ஒரு மணித்தியாலத்துக்கு நீங்கள் நடைப்பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

மறுநாள் மாலை தாய் நண்டு பிள்ளைகளை கடற் கரைக்கு அழைத்துக்கொண்டு சென்றது. நான் ஒன்று இரண்டு மூன்று சொன்னதும் நேராக நடந்து நூறு மீற்றரை தாண்ட வேண்டும் என தாய் நண்டு கூறியது. தவறினால் தண்டனை வழங்கப்படும் எனவும் நிபந்தனை விதிக்கப்பட்டது.

தொடர்ந்து மூன்றுநாள் பயிற்சி நடைபெற்ற போதிலும் நண்டுக்குட்டிகளால் நேராக நடக்க முடியாது இடப்பக்கமாகவே நடந்து கொண்டிருப்பதை கண்டுகொண்ட தாய் நண்டு கடுமையான கோபத்துடன் குட்டிகளை தலையில் குட்டி "தாய் சொல்லை கேட்காது நடந்து கொண்டிருக்கிறீர்களே? உங்களை என் பிள்ளைகள் என்று சொல்வதற்கே வெட்கமாக இருக்கிறது" என்று கண்டிப்பாக கூறியபோது சற்று துணிந்து நின்ற நண்டுக்குட்டி "அம்மா மூன்றுநாள் முயன்றும் எங்களால் நேராக நடக்க முடியவில்லை எங்களுக்கு கண்களும், கைகளும், கால்களும் நேராக இருந்தும் நடை மாறவில்லை தயவுசெய்து எங்களுக்காக ஒருதடவை நடந்து காட்டுங்கள்" என்று பரிவுடன் கேட்டபோது தாய் நண்டு நடந்துகாட்டியது. அப்போது தாய்நண்டும் கோணலாக நடப்பதை கண்ட குட்டிநண்டுகள் வாய்மூடி மௌனமாக சிரித்தன.

**நல்வழி நங்கை**

"எங்கே விடை கூறுங்கள்" (போட்டி இல:01)

1. மகாத்மா எந்த நாட்டை சேர்ந்தவர்?
2. அண்ணலுக்கு தொழுநோயாளி அளித்த பரிசு என்ன?
3. இக்கதைக்கு பொருத்தமான வேறு தலைப்பு என்ன?
4. இக்கதையின் கருப்பொருளாக இருப்பது என்ன?
5. தொழுநோயாளி மட்டில் அண்ணல் கொண்ட பண்பு என்ன?
6. கடுகுக்கதையிலிருந்து நீங்கள் அறிந்து கொள்வது என்ன?

**உங்கள் விடைகளை 30.08.2006 இற்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியதாக பெயர் முகவரி பாடசாலை விபரங்களுடன் அனுப்பி வையுங்கள்**



# உவமையில் கதைசொன்னாரா? உலகத்தின் நிலைசொன்னாரா?

இறையரசு என்பது?. இவ்வுலகிற்கு அப்பாற் பட்டது!. அது 'விண்ணரசு' என்றும் அதில் வாழும் இறைவன், அணுக முடியாத ஒளியில் வாழ்பவர்; அவரை அண்டிச்செல்ல எவராலும் இயலாது என்றும், உலகை மூவகையாக பிரித்து விண்ணுலம், மண்ணுலகம், பாதாளம் என வகைப்படுத்தி, மண்ணுலகே நிஜம்! விண்ணுலகை எவரும் அண்டிச்செல்ல முடியாதுஎன்று கருதப்பட்ட காலத்திலே, இறையரசு எமக்கு அப்பாற்பட்ட ஒன்றல்ல, அது எம்மிடையே, அதுவும் எமக்குள்ளேயே உள்ளது! இறைவன் எமக்கு அப்பாற்பட்ட ஒருவரல்ல, அவர் எமக்கு "அப்பா" உறவு முறையானவர் என்ற பேருண்மையை எடுத்துச்சொல்ல இவ்வுலகில் மனுஉரு எடுத்து வந்த இயேசு, இறையரசை பற்றிய பேருண்மைகளை மூவகைகளில் விபரித்தார்.

"போதனை" வழியாகவும் "அருள்அடையாளங்கள்" மூலமாகவும் "உவமைகள்" (கதைகள்) வடிவத்திலும் எடுத்துச் சொல்லி உலகின் நிலை பற்றி விரித்துரைத்தார். இயேசுவின் இறையரசு பற்றிய உவமைகள் (கதைகள்) நான்கு நற்செய்தியாளர்களும் நாற்பது (40) கதைகள்வழி தருகின்றனர்.

சாதாரண கதைகளை ஆரம்பத்திலேயே தொடங்கிவிட்டால், முடிவு என்ன மாதிரி முடிவடையப்போகிறது? என்பது வாசகர்களுக்கு ஓரளவு தெரியவரும். ஆனால் இயேசுவின் கதைகளோ? முடிவடையாமல், கேட்பவர்கள் எதிர்பாத்தமைக்கு மாறாக, அவர்களது சிந்தனையை கிளறிவிடும் விதத்தில் அமைந்துவிடுதல் வியப்பானது!.

இயேசு பாட்டாளிகளுக்கும் கதைசொன்னார்! பாட்டிக்கும் கதைசொன்னார்! மீன் பிடிக்கும் ஏழைகளுக்கும் கதைவழி கருத்துரைத்தார்! வயல் நிலத்தில் விதைக்கும் உழவனுக்கும் உவமை சொன்னார்!. உவமைகளில் கதைகள் சொல்லி, உலகத்தின் நிலை நிலைகள் சொன்ன இயேசுவின் உவமை ஒன்றை சற்றே உணர்வோமா?

"விதைக்கின்ற வயற்காரன் எடுத்தான் வித்தை,
வீழ்ந்தனவே சில அந்த வரம்பின் ஓரம்!
அதைவந்த பறவைகளே கொத்திப் போகும்
அவை கொஞ்சம் பாறையிலும் விழவும் கண்டான்.
இதமான இடமின்றி அவையெல்லாமும்

இறகுமுளைக்கு முன்பே பட்டுப் போகும்!
வதைமுள்ளின் நெருக்கடியில் விதைகள் வீழ்ந்து,
வளராமல் கருகிவிடும் ஒன்று கேட்பீர்!
நல்லநிலத் தின்மீது விழுந்த வித்து,
நாள்தோறும் அறுவடைக்கு நிற்கும் சொத்து" (இயேசு காவியம்)

நற்செய்தியாளர்கள் (மாற்,4:1-9, மத்,13:1-9 லூக்,8:4-8) வசனங்களில் வரும் இக்கதையை, கவியரசு மேற்சொன்னவாறு அழகாக வர்ணித்திருக்கிறார். விழுந்த விதைகள் ஒன்றாயினும், விழுந்த இடங்கள் வெவ்வேறு! நான்கு இடங்களும் நால்வகை மக்களை இயேசு குறிப்பிட்டுகாட்ட முன்வருகிறார்!

உலகிலுள்ள மதங்கள் எல்லாம் நற்செய்தியையே தருகின்றன! அவற்றில் ஒருசில, போதனையோடு நின்று விடுகின்றன! வாழ்வில் அவற்றைக் கடைப்பிடிக்கத் தூண்டுவதில்லை. இவைகளை வீதியோரத்தில் விழுந்த விதைகளுக்கு ஒப்பிடலாம். பாறைகள மத்தியில் விழுந்த விதைகளுக்கு ஒப்பானவர்கள் "கற்க கசடறக் கற்பவர்கள், கற்றபின் அத்துடன் நிற்பவர்கள். "அதற்குத்தக" நடக்காதவர்களை ஒப்பிடலாமா? இவர்கள் ஆழமான விசுவாசம் இல்லாதவர்கள். குறிப்பிட்ட செபங்களை பாடமாக்கி அவற்றை ஒப்புவித்தால் மட்டும் போதும் என நினைக்கும் எம்மவரில் சிலரை காணலாம்.

பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை "அருளில்லார்க்கு அவ்வுலகில்லை! என்ற முதுமொழிக்கிணங்க, பொருளாசை ஒன்றை மட்டுமே கருத்தில் கொண்டு, உலகநாட்டங்களில் கவலைகளை மூழ்கவிட்டு, எமக்கு இன்னொரு வாழ்வு, அதுவும் நித்திய வாழ்வு ஒன்று உண்டு என்பதை மறந்துவாழும் பேராசை பிரியர்களை, முட்கள் நடுவில் வீழ்ந்த விதைகளுக்கு இலக்கணம் கூறலாம்.

செல்வம் ஒருநாள் "செல்வோம்" என்றும், தரித்திரம் "தரித்திரோம்" என்று பணமும், வறுமையும் நிரந்தரமானதல்ல "நீரே நிரந்தரம்" என்று இறைவார்த்தையை கற்பதோடு, கற்றலுடன் நிற்காது "அதற்குத்தக்க" வாழ்வை மாற்றியமைத்து இறை சித்தத்தை ஏற்று, மதித்து வாழ்பவர்களை நல்ல நிலத்தில் வீழ்ந்த விதைகளுக்கு உவமானமாக கூறலாம்.

இவ்வாறு சிறு சிறுகதைகள் முலம் இறையரசின் விழுமியங்களை எடுத்துச்சொல்லி ஒரு நற்சமூகத்தை உருவாக்க முன்வந்த இயேசுவின் உவமைகளை படிப்பதோடு மட்டும் நின்றவிடாது, அதில் ஆழமாகப் புதைந்துள்ள முத்துக்களைத் தேடிக் கண்டுபிடிக்க முன்வருவோம்.

# இறைத் தூதுரைத்தோர்



## இத்தாலி பெற்ற தவப் புதல்வன் புனித ஆசீர்வாதப்பர்

மதங்கள் பலவாயினும், அதன் கோட்பாடுகளும் தத்துவங்களும் ஒன்றுக்கொன்று வேறுபட்டாலும் எந்த மறை நெறிக்கும் அடிப்படை நோக்காக அமைவது "மனிதன் புனிதனாகி பின்னர் தான் ஒழுகிய நெறிக்கேற்ப நம்பிய இறைவனைக் காண்பதேயாகும்." இந்த அடிப்படையில்தான் திருச்சபையில் கிறிஸ்துவை விசுவசிப்பவர்கள் அத்தனைபேரும் வாழ்வின் முழுமைக்கு, நிறைவிற்கு, புனிதத்துவத்திற்கு அழைக்கப் படுகின்றார்கள். இந்த அழைப்பிற்கு முழுமையான அர்த்தத்தைக் கொடுத்தவர்களே இன்று புனிதர்களாக வந்திக்கப்படுகிறார்கள். "தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர் என்ற மலை மறையுரையின் முழக்கத்தை உணர்ந்தவர்களாய், தீமையைக் களைந்து, எளிமையை நேசித்து, மெய்மையில் நிலைத்து, தூய்மையில் வாழ்ந்தவர்களே நம் புனிதர்கள். இவர்கள் போதனைகளை வாழ்வாக்கி அதனால் வந்த வேதனைகளை சாதனைகளாக்கியவர்கள். இவ்விதம் திருச்சபையின் தலைசிறந்த புனிதர்களில் ஒருவராக கருதப்படுபவரே புனித ஆசீர்வாதப்பர்.

மேலைத்தேசத்தின் பாதுகாலரெனப் போற்றப்படும் புனித ஆசீர்வாதப்பர் (Benedict அல்லது Bennet) ஐரோப்பாவின் இத்தாலி தேசத்திலே நோர்சியா (Norsia) பதியில் ஏறத்தாழ 480 ம் ஆண்டளவில் யூரோபியஸ் (Eutropius) என்பவருக்கு மகனாகப் பிறந்தார். உயர் குடும்பத்தில் பிறந்தாலும் தெய்வ பயத்துடன் வாழ்ந்த பெற்றோரின் அரவணைப்பில் வளர்ந்த சிறுவன் ஆசீர்வாதப்பர், ஞானத்திலும், அறிவிலும், கீழ்ப்படிவிலும் பாலகப் பருவத்தை கழித்து வந்தார். அறிவும், உடலும், ஒருசேர வளர்ச்சியும், முதிர்ச்சியும் பெற்று வாலிபத்தை எட்டிய ஆசீர்வாதப்பரின் உயர் கல்வித்தகுதியை கண்டுணர்ந்த அவரது பெற்றோர் உரோமாபுரியின் பிரசித்தி பெற்ற ஒரு கல்லூரிக்கு அவரை அனுப்பினர்.

உரோமை நகரின் நவீனத்துவமும், மார்க்கம் மறந்த மக்களின் கட்டுப்பாடற்ற வாழ்க்கையும், இறைவனை மறந்த இளையோரின் உலகப்போக்கும் தெய்வ பயத்தில் வளர்ந்து முதிர்ச்சி பெற்ற ஒரு வாலிபனை

வெகுவாகப் பாதித்ததது. பாவத்தில் விழுவதை முற்றிலும் வெறுத்த அந்த இளைஞன் ஆசீர்வாதப்பர் பாவத்தையும் அதன் காரணிகளையும் தவிர்க்க தனிமையில் வனாந்தரம் செல்லத் தீர்மானித்தார். ஈற்றில் உரோமாபுரியில் இருந்து ஏறத்தாழ 40 மைல் தொலைவிலுள்ள சுபியாக்கோ வனத்தை சென்றடைந்தார். இந்த இடத்திற்கு அருகாமையில் இருந்த ஓர் ஆச்சிரமத்தில் வசித்து வந்த றோமானுஸ் (Romanus) என்ற துறவி இளைஞன் ஆசீவாதப்பரை அன்புடன் வரவேற்று, துறவிகளுக்கே உரித்தான ஓர் அங்கியை அவருக்கு அணிவித்து, அவருக்கே என ஒதுக்கப்பட்ட ஓர் இடத்துக்கு அனுப்பினார். மலைகளுக்கிடையில் மிகவும் ஒடுங்கிய, ஒரு சாதாரண மனிதனுக்கு ஒவ்வாத ஒரு குகையை பெற்றுக்கொண்ட ஆசீர்வாதப்பர், இன்முகத்தோடு அதனை ஏற்று அதையே தம் மடாலயமாக்கினார்.

மூன்று ஆண்டுகள் றோமானுசைத் தவிர யாருமே அறியாதவாறு மறைந்த வாழ்க்கை வாழ்ந்த ஆசீர்வாதப்பர் பொருட்டு இறைதிட்டம் வேறானதாகவே அமைந்தது. தன் திருவுளப்படி வாழும் தன் ஊழியனை ஏனையோரும் அறியவேண்டுமென இறைவன் விரும்பினார். 497 ம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு அன்று ஒரு குருவானவர் தன் உணவை சமைத்துக்கொண்டிருந்த வேளை ஒரு குரலொலியை அவர் கேட்டார். அதாவது "என்னுடைய ஊழியன் ஆசீர்வாதப்பர் சுபியாக்கோவில் பசியால் துன்புறுகிறார். நீர் இங்கு உமக்கு உணவு சமைக்கிறீரோ?" என்பதாகும். இதைக்கேட்ட அக்குருவானவர் வனாந்தரம் நோக்கி விரைந்தார். நடந்த யாவற்றையும் அறிந்த ஆசீர்வாதப்பர் இறைவனைப் போற்றினார். எவ்வளவு தூரம் ஆசீர்வாதப்பர் தபத்திலும், செபத்திலும் நிலைத்திருந்தாரென்றால் அவர் அன்றைய நாள் உயிர்த்த ஞாயிறு என்பதைக்கூட அறியாதிருந்தார். இதன் பின்னர் ஆசீர்வாதப்பரின் புகழ் எங்கும் பரவத் தொடங்க பலர் அவரைக்காண வனாந்தரம் ஓடினர்.

தெளிந்த தெய்வீகத்தின் தேடலில் ஆசீர்வாதப்பர் நிலைத்து நின்றாலும் அவர் அனுபவித்த சோதனைகள் எண்ணிலடங்கா. 2பேதுரு5:8 இல கூறப்பட்டபடி கர்ச்சிக்கும் சிங்கம் போல் யாரை விழுங்கலாமென தேடித்திரியும் அலகை, ஆசீர்வாதப் பரையும் விட்டுவைக்கவில்லை. எனினும் புனிதரின் அசைக்க முடியாத இறைவிசுவாசம், அலகையை வெற்றிகாண விடவில்லை. ஒருமுறை இறை தியானத்தில் ஆசீர்வாதப்பர் ஈடுபட்டிருந்த

வேளை ஒரு சிறு கரும்பறவை வடிவில் வந்தஅலகை அவரின் தியானத்தைக் குழப்ப முயற்சித்தது. ஆயினும் வல்லமையுள்ள திருச்சிலுவை அடையாளத்தை நம்பிக்கையுடன் வரைந்து, அலகையின் சூழ்ச்சியை வெற்றி கொண்டார். தோல்வி கண்ட அலகை வேறுவிதத்தில் அவரை சோதிக்க முனைந்தது. ஆசீர்வாதப்பர் துறவியாவதற்கு முன்னர் அவரை நேசித்த ஓர் பெண்ணை மீண்டும் அவர் நினைவுக்கு கொண்டுவந்து சோதித்தது. அலகையின் கடும் சோதனையால் துவண்டுபோன புனிதர் தன் தவத்தையும் செபத்தையும் கைவிடும் நிலைக்கு சென்றாலும், ஈற்றில் தன் தவறை உணர்ந்தவராய் அதற்கான பரிகாரத்தை தேடினார். எவ்வளவு தூரம் தன் தவறுக்காய் வருந்தினார் என்றால், முட் புதருக்குள் உருண்டு, தன் உடலில் இரத்தக்காயங்கள் உண்டாகும்வரை ஊருக்கமாக பரிகாரம் பண்ணினார்.

இவ்வாறாக சுபியோக்கோ வனாந்தரத்தில் ஆசீர்வாதப்பரின் புகழ் மேலோங்க, பிரபுக்களும் உயர்குலத்தாரும் தங்கள் புதல்வர் களை புனிதரின் வழிகாட்டலிலே வளர வனாந்தரம் அனுப்பினர். அவர்களை வரவேற்ற ஆசீர்வாதப்பர் அவர்களுக்கென 12 மடாலயங்களை நிறுவி அவை ஒவவொன்றுக்கும் மடாதிபதிகளை நியமித்தார். தூயஆவியாரின் புனிதப்படுத்தலுக்கு செபம் அவசியம் என்பதை உணர்ந்த ஆசீர்வாதப்பர் தம் துறவிகள் யாவரும் செபத்தையும், தவத்தையும் முதன்மையாக்க வேண்டும் என்பதில உறுதியாக இருந்தார்.

ஆன்மீக, செப, தவ, ஒறுத்தல், ஒழுக்கத்தில் சிறந்து வாழ்ந்த துறவறத்தாரையும், மடாதிபதி ஆசீர்வாதப்பரையும் காணத்துடித்தவர்கள் ஏராளம். புனிதரின் புகழை புனிதத்தை பொறுக்கமுடியாத அலகை தனது கருவியாக புளோரன்சியுஸ் என்ற குருவை பயன்படுத்தி ஆசிர்வாதப்பரை துன்புறுத்த தீர்மானித்தது. அழகான பெண்களை சுபியாக்கோ வனாந்தரத்துக்கு அனுப்பி புனிதரையும் துறவியரையும் சோதனைக்குட்படுத்தி அவ்விடம் விட்டு விரட்ட சூழ்ச்சி செய்தது. புளோரன்சியசின் தந்திரத்தை அறிந்த ஆசீர்வாதப்பர் அவ்விடம் விட்டு விலகி மொன்ரே காசினோ (Monte Carsino) மலையை நாடிச்சென்றார். ஏறத்தாழ 528ம் ஆண்டளவில் கசினோ மலையை அடைந்த புனிதர் இங்குதான் துறவற வாழ்வுக்கான ஒழுங்கு முறைகளை எழுதியதாக கருதப்படுகிறது. துறவறத்தின் ஆரம்ப கர்த்தாக்களான பக்கோமியாஸ், பசில் போன்றோரின் சட்ட ஒழுங்குகளையும் பயன்படுத்தி தம் துறவிகளுக்கான ஒழுங்குகளை எழுதினார். ஞான

வாழ்வுக்கும், குழும வாழ்வுக்கும், ஏற்புடையதான தெளிந்த இவ் ஒழுங்கு முறைகள் இன்றும் திருச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, இன்றைய குருத்துவ துறவற வாழ்விலும், பல வழிகளில் செல்வாக்கு செலுத்துகின்றன என்பதே யதார்த்தம்.

வழிபாடு, செபம், வேலை, திருவிவிலியம் என்பவற்றை முதன்மையாக கொண்டு வரையப்பட்ட ஆசீர்வாதப்பரின் ஒழுங்குகள் ஒவ்வொரு துறவியும் தாம் விரும்பியபடி வாழாமல் ஒரே ஒழுங்கு முறைக்கு உட்பட்டவர்களாக ஒன்றாக அன்புறவில் வாழ அழைக்கிறது. விரதத்துவத்தோடு, எளிமையில் கிறிஸ்துவுக்கு கீழ்படிவது போல் மடாதிபதிக்கும் கீழ்படிந்து, பக்குவப்பட்ட ஒரு குழுமமாக அமையவேண்டும் என தம் துறவிகளுக்கு அறிவுறுத்தினார். ஆசீர்வாதப்பர் வெறுமனே மடாதிபதி மட்டுமல்லாமல் தம் செப, தப, வல்லமையால் இறைவனின் விசேட வரங்களை பெற்ற முனீந்திரனாகவும் கருதப்படுகிறார். பல பெரும் புதுமைகளை செய்பவராகவும், தீர்க்கதரிசன வல்லமையுடையவராகவும் விளங்கினார்.

இத்தகைய தவப்பெரும் புனிதனாக, தூய்மையில் வாழ்ந்து, ஏனையோரையும் புனிதத்துவத்துக்கு அழைத்துச் சென்ற ஆசீர்வாதப்பரை போலவே அவரின் அன்புச்சகோதரி ஸ்கொலஸ்ரிக்காவும் தன்னையே அர்ப்பணித்து பெண்களுக்கான துறவற மடாலயத்தை கசினோ மலைக்கு சமீபமான ஓர் இடத்திலேயே ஆரம்பித்தார். தன் சகோதரியின் முயற்சியில் அக்கறையாய் இருந்த ஆசீர்வாதப்பர் அடிக்கடி அந்த இல்லத்துக்கு சென்று அவர்களுக்கு வேண்டிய ஆன்மீக வழிகாட்டலை வழங்கி வந்தார். ஒருமுறை தன் சகோதரியை சந்திக்க சென்றவேளை அவர் சகோதரி ஸ்கொலஸ்ரிக்கா அன்றைய நாளில் ஆசீர்வாதப்பரை தன் மடாலயத்தில் தங்கிவிட்டு மறுநாள் செல்லுமாறு கெஞ்சினாள். இந்த வேண்டுதல் ஆசீர்வாதப்பர் முன்னிலையில் பயனற்றதானது. ஆயினும் இறைதிட்டம் வேறானதாகவே இருந்தது. ஆசீர்வாதப்பர் அந்த மடாலயத்தை விட்டு புறப்பட்ட வேளை என்றுமில்லாதவாறு இடியுடன் பெருமழை உருவானது. வேறு வழியின்றி தங்கையின் மடாலயத்திலேயே இரவுப் பொழுதை கழிக்க நேர்ந்தது. அவ்வேளை புனிதரும் அவர் சகோதரியும் மகிழ்வோடு பரலோக காரியங்களை பற்றி பேசினர் இதுவே இவர்களின இறுதி சந்திப்பாக அமைந்தது. இதன் பின் ஓரிரு தினங்களில் தங்கை ஸ்கொலஸ்ரிக்கா இறைபதம் சேர்ந்தார். புனிதர்

எவ்வளவு தூரம் தன் தங்கையை நேசித்தார் என்றால், தன் தங்கை இறந்தவுடனே அவரின் ஆன்மா ஒரு வெண்புறா வடிவில் பரலோகம் நோக்கி செல்வதை கனவில் கண்டார்.

சகோதரியின் மரணத்தின் பின் தனது இறுதிநாட்களும் நெருங்கி விட்டன என்பதை தனது தீர்க்க தரிசன வல்லமையால் அறிந்து கொண்டார். இறப்பதற்கு ஆறு நாட்கள் முன்னதாகவே தான் அடக்கம் செய்யப்பட இருந்த கல்லறையை ஆயத்தமாக திறந்துவைக்க தம் சீடர்ளை பணித்த ஆசீர்வாதப்பர், அவர் முன் குறித்தவாறே ஆறாம் நாள் கடும் காய்ச்சலால் பீடிக்கப்பட்டார். படுக்கையோடு ஆலயத்துக்கு தூக்கி செல்லப்பட்ட ஆசீர்வாதப்பர் பயபக்தியோடு தான் அதிகம் நேசித்த தன் மீட்பரின் மறையுடலையும் இரத்தத்தையும் உட்கொண்டார். தந்தைக்குரிய பாசத்தோடு தம் சீடர்களை தம் அண்டை அழைத்து தன் இறுதி அறிவுரைகளை அன்புவார்த்தைகளாக மொழிந்து தன் இருகரங்களையும் உயர்த்தி செபித்தவாறே பங்குனி திங்கள் 21ம் நாள் சனிக்கிழமை இறையோடு சங்கமமானார். புனித ஆசீர்வாதப்பர் 543ம் ஆண்டு தன் 63வது வயதில் இறந்ததாக கருதப்படுகிறது. துறவறத்தை முழுமையாக வாழ்ந்த பெரும்புனிதர் ஆசீர்வாதப்பர் இன்றும் துறவற சபைகளின் பாதுகாவலராகவும், தந்தையாகவும் போற்றப்படுவது மட்டுமல்லாது, அவரது ஒழுக்கப்புத்தகமும் இன்று பல துறவறசபைகளின் ஒழுங்குகளுக்கு அடித்தளமாக அமைகிறது. ஆசீர்வாதப்பரின் கடின உழைப்பால் உருப்பெற்ற அவரது துறவற சபைகள் இன்று பெருவிருட்சமாகி பெரும்பணியாற்றி வருகின்றன. இதுவரையில் அவரது சபையானது 24 பாப்புமாரையும் 5000க்கும் மேற்பட்ட புனிதர்களையும் திருச்சபைக்கு தந்துள்ளது. இத்தகைய தலைசிறந்த புனிதரை தந்த இறைவனுக்கு திருச்சபை இன்றும் நன்றி கூறுகின்றது.

**சகோதரன் லெபோண் சுதன்**

---

> **“வார்த்தை உனக்கு மிக அருகில் உள்ளது:**
> **உன் வாயில், உன் இதயத்தில் உள்ளது”**
> **(உரோ 10:8)**

உளவியல்

# சிறுமையுள் நீங்கிய இன்சொல்

"நல்லாரின் சொற்கள் வாழ்வளிக்கும் ஊற்றாகும் பொல்லாரின் பேச்சிலோ கொடுமை மறைந்திருக்கும்" (நீமொ.10:11)

மனித உறவுகளை காப்பதில் மொழிப்பயன்பாடு முக்கிய இடத்தை வகிக்கின்றது என்பது வெளிப்படையான உண்மை. ஒரு குடும்ப உறுப்பினர்களுக்கிடையில் நடைபெறும் உரையாடல் முதற்கொண்டு அரசாங்கங்களுக்கிடையில் நடைபெறும் பேச்சுவார்த்தை வரை எல்லா சந்தர்ப்பங்களிலும் வலுவற்ற மொழிப்பயன்பாடு இன்றியமையாத தேவையாக இருக்கின்றது.

மொழி என்பது பேசப்படும் வார்த்தைகளுடன், முகபாவங்கள், அங்கஅசைவுகள் போன்ற கருத்து வெளிப்படுத்தும் எல்லா முறைகளையும் உள்ளடக்கியதொன்றாகும். கருத்தை வெளிப்படுத்தும் போதோ அல்லது பிறர் கருத்துக்கு செவிமடுக்கும்போதோ துல்லியமாகவும், தெளிவாகவும், சரியாகவும் செயற்படவேண்டியது மிகவும் அவசியம். ஏனெனில் பயன்படுத்தும் ஒரு சொல் அல்லது ஓர் அசைவு தவறாக அமைந்தால் கூட சில சந்தர்ப்பங்களில் அது பிறரை காயப்படுத்தி அல்லது எரிச்சலூட்டி உறவுகளில் விரிசல்களை ஏற்படுத்தும். இதனால் கருத்து வெளிப்படுத்தும் மற்றும் செவிமடுக்கும் சீரான ஓர் முறைபற்றி மனித இனம் சிந்திக்கலாயிற்று. இச்சிந்தனை பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தோற்றம் பெற்றுவிட்டது. தொன்மையான நூல்களில் கூட நாவடக்கம், இன்சொல் பேசுதல் பற்றிய பல குறிப்புக்கள் காணப்படுகின்றன. பிறரை வருத்தாத இனிய சொல்லின் மேன்மை பற்றி திருக்குறள் பின்வருமாறு கூறுகின்றது.

"சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும் இம்மையும் இன்பம் தரும்" (குறள்:98)

மொழி மற்றும் மனித தொடர்பாடல்கள் பற்றி உளவியலாளர்களும் பல கற்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறான ஒரு கற்கையின் விளைவாக "இன்னாத களைந்த தொடர்பாடல்" (Non Violent Communication) என்றவோர் கொள்கை Dr. Marshall Rosenbery என்ற

சிந்தனையாளரால் முன்வைக்கப்பட்டுள்ளது. இன்று உலகின் பல்வேறு பாகங்களிலும் அறிமுகப்படுத்தப்பட்டு வரும் இக்கொள்கை எமது தமிழ் சமூதாயத்தினரிடையேயும் அறிமுகப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

இன்றைய உலகம் எல்லாவகையான வன்முறைகளையும் ஒழிப்பது பற்றி பேசி வருகின்றது. இவ்வடிப்படையில் பேச்சில் மறைந்திருக்கும் வன்முறைகளை அகற்றுவதற்கான குறிக்கோளுடன் இக்கொள்கை முன்வைக்கப்பட்டுள்ளது. மற்றவர்களை காயப்படுத்தும் மற்றும் எரிச்சலூட்டும் வார்த்தைகள், செயற்பாடுகள்தான் பேச்சில் மறைந்திருக்கும் வன்முறைகள். மனிதர்கள் இயல்பாகவே பரிவு, இரக்ககுணம், தயாள சிந்தை கொண்டவர்களாக இருந்தாலும் சில சந்தர்ப்ப சூழ்நிலைகள் அவர்களை முற்றாக மாற்றி விடுகின்றன. இதற்கு பொருத்தமற்ற வார்த்தைப் பிரயோகமும், மொழிப்பயன்பாடும் கூட ஓர் முக்கிய காரணமாக அமையமுடியும் என்பதை நாம் அனுபவ வாயிலாக நன்கறிவோம். இதனால் பல நூற்றாண்டுகளாக அறியப்பட்டுவந்த தொடர்பாடல் திறன்களையும், மொழித்திறன்களையும் ஒருங்கிணைத்து மற்றவர்களை எவ்வகையிலும் காயப்படுத்தாத, எரிச்சலூட்டாத தொடர்பாடல் முறையாக இன்னாத களைந்த தொடர்பாடல் முறை உருவாக்கப்பட்டுள்ளது.

இன்று எமது அன்றாட வாழ்வில் நாம் பேசும் அல்லது செவிமடுக்கும் முறை ஓர் இயந்திரத்தனமான செயற்பாடாகும். நாம் எமது சூழலிலிருந்து எதனை கற்றோமோ அதனையே பின்னற்றி வருகின்றோம். எமது பேசும் முறை, செவிமடுக்கும் செயற்பாடு எல்லாம் எம்மை சுற்றியிருப்பவர்களின் பிரதிபலிப்பாகவே இருக்கின்றது. நாம் அதிகாமாக அன்றாடம் பாவனைக்கு உட்படுத்தும் சொற்கூட்டம் கூட எம்மை சூழஇருப்பவர்களிடமிருந்து பெறப்பட்டவையாகவே இருக்கும். எதுவும் இயல்பானதாக இதயத்திலிருந்து எடுத்துக் கொடுப்பதாக இல்லை. அதனால் இப்புதிய நுட்பமுறையை கற்றுக்கொள்வதன் மூலம் எமது தொடர்பாடல் திறன்களை மீள ஒழுங்குபடுத்திக்கொண்டு இயல்பானவர்களாக இதயத்திலிருந்து உரையாடுபவர்களாக வளப்படுத்திக்கொள்ளமுடியும்.

இப்புதிய தொடர்பாடல் முறைமை மனிதர்களின் ஆழமான உளத்தேவைகளை அடிப்படையாகக் கொண்டு கட்டி எழுப்பப்பட்டுள்ளது. மனிதர்களின் எல்லாவித செயற்பாடுகளுக்கும் அவர்களுடைய ஆழமான உளத்தேவைகளே காரணமாக இருக்கின்றன. இத்தேவைகளை புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்வதன் மூலம் உறவு, ஐக்கியம், சமாதான சகவாழ்வுக்கான ஒரு அடித்தளத்தை உருவாக்க முடியும். இவ் அடிப்படை தத்துவமே இன்னாத களைந்த தொடர்பாடல் முறைமையின் மூலைக்கல்லாக அமைகின்றது. எம்முடையதும், மற்றவர்களுடையதுமான ஆழமான உள்ளத்தேவைகளை அடையாளம் கண்டுகொள்வது எம்மை பாதிக்கும் நடத்தைகளையும், நிலமைகளையும் புரிந்து கொள்ள வழிவகை செய்யும். எமது வழமையான முறைகளான தீர்ப்பளித்தல், குறை கூறுதல், வார்த்தைகளால் தாக்குதல், தற்காக்கும் அல்லது பின்வாங்கும் பேச்சு உத்திகளிலிருந்து எம்மை விடுவித்துக்கொண்டு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எமது தேவையை திட்டமாக அடையாளம் கண்டு தெளிவாக வார்த்தைகளில் முன்வைக்க முடிகின்றது.

எமது அவதானங்களை, உணர்வுகளை, தேவைகளை பகுப்பாய்ந்து புரிந்துகொள்ளும் தேர்ச்சியை அடையப்பெறுவதன் மூலமே இப்புதிய தொடர்பாடல் முறைமையின் முதிர்ச்சியை எய்தலாம். இது ஒரு புதிய மொழியை கற்றுக்கொள்வதை ஒத்த செயற்பாடு என்பதால், படிப்படியான பயிற்சி தேவைப்படும். தேர்ச்சியை அடைவதன் மூலமே நாம் ஒரே நேரத்தில் எமது அகக்குரலுக்கும், மற்றையவரின் அகக்குரலுக்கும் செவிமடுக்க கூடியவராவோம். இதன் மூலம் கரிசனை, மரியாதை, ஒத்துணர்வுஎன்ற பண்புகளை மேலோங்கச்செய்யலாம். எமது இரக்க சிந்தையின் அடியாழத்தை தொட்டுவிட முடியும். அப்போது எம்மால் இதயத்திலிருந்து கொடுக்க முடியும். இதயத்திலிருந்து கொடுக்கும் போது பெறுபவர் மட்டுமல்ல கொடுப்பவரும் மகிழ்ச்சியில் ஆழ்கின்றார்.

நாம் இப்புதிய அணுகுமுறையை எச்சந்தர்ப்பத்திலும் எவரோடும் பயன்படுத்தி தொடர்பாடலை நடத்தலாம். நாம் யாரோடு பேசுகின்றோமோ அவர் இன்னாத களைந்த தொடர்பாடல் முறைபற்றிய அறிவுடையவராக

இருக்கவேண்டும் என்ற எந்த தேவையுமில்லை. அவர் இப்புதிய புரட்சிபற்றி எதுவும் அறிந்திராதவராக இருக்கலாம். ஒருவேளை எமது பேச்சின் இனிமை கண்டு அவரும் படிப்படியாக தம்மையறியாமலேயே இதனை பின்பற்ற ஆரம்பித்து விடக்கூடும்.

இவ் இன்னாத களைந்த தொடர்பாடல்முறை ஐந்து அடிப்படை அம்சங்களை கொண்டதாகும். அவையாவன அவதானங்கள், உணர்வுகள், தேவைகள், கோரிக்கைகள், ஒத்துணர்வு என்பனவாகும். இக்கூறுகளை மிக மிக அடிப்படை மட்டத்தில் விபரித்தால்: அவதானங்கள் எனப்படுவது எமது சுற்றுப்புறத்தில் என்ன நடைபெறுகிறது என்பதை கவனித்தலாகும். மற்றவர் பேசுவதை கவனமாக செவிமடுத்தல், மற்றவர் செயற்பாட்டை கவனித்தல் என்பன இதிலடங்கும். இங்கு முக்கியமானது என்னவெனில் எமது விமர்சனங்களை இதில் சேர்த்துக்கொள்ளக்கூடாது. உதாரணமாக ஒரு சிறுவன் தனது கையிலுள்ள மிட்டாய்களை நிலத்தில் வீசி எறிகின்ற போது, ஒருவர் "சிறுவன் மிட்டாய்களை நிலத்தில் வீசி எறிந்துவிட்டான்" எனக்கூறினால் அது அவருடைய அவதானம். பதிலாக "சிறுவன் கோபமாக இருக்கிறான்" என்று கூறினால் அது இச்செயல் பற்றிய அவருடைய மதிப்பீடு அல்லது விமர்சனமாகும்.

அடுத்து இவற்றை அவதானிக்கும் போது எமது உள்ளத்தில் ஓடும் உணர்வு என்ன என்பதற்கு விழிப்புணர்வடைதலாகும். நாம் கவலையடைகிறோமோ, பயமடைகிறோமோ, கோபப்படுகிறோமோ, சந்தோசமாக உணர்கிறோமோ என்று நம்மை நாமே அறிந்து கொள்ளல்.

உணர்வுகள் தேவைகளாலேயே தோற்றுவிக்கப் படுகின்றன. எனவே அடுத்தபடி எமது என்னென்ன உளத்தேவைகள் இவ்வுணர்வுகளுடன் தொடர்புபட்டுள்ளன என்று மிகத்தெளிவாக அறிந்துகொள்ளுதலாகும்.

இறுதியாக மிக திட்டவட்டமாக எமது தேவைகளை கோரிக்கைகளாக முன்வைக்க பழகுதலாகும். எமது கோரிக்கைகள் நிறைவேற்றக்கூடியவையாக அமைதல் வேண்டும். அவை எதிர்மறையானதாக அமைவது விரும்பத்தக்கதல்ல. உதாரணமாக "நீங்கள் மறுபடியும் பிந்தி

வராமலிருக்க முயற்சி செய்வீர்களா?" என்பதை விட "நீங்கள் இன்று மாலை குறித்த நேரத்திற்கு வர முயற்சி எடுப்பீர்களா?" எனக்கோரலாம்.

ஒத்துணர்வு என்பது மற்றையவர்களின் உணர்வுகளையும், தேவைகளையும் புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்வதாகும். சில வேளைகளில் இதனை செயல்மூலம் காட்டலாம். சில வேளைகளில் வார்த்தைகளில் எடுத்துச் சொல்லவேண்டியிருக்கும். மற்றையவர்களின் உணர்வுகளுக்கும், தேவைகளுக்கும் நாம் மதிப்பளிக்கிறோம் என காட்டிக்கொள்வது இன்னாத களைந்த தொடர்பாடல் முறையின் முக்கியமான செயற்பாடுகளில் ஒன்றாகும்.

இத் தொடர்பாடல் முறையின் சிறப்பு யாதெனில் பேசுபவர், கேட்பவர் இருவருமே தத்தமது தேவைகளை நிறைவு செய்துகொள்ளக்கூடிய ஒரு தீர்வை நோக்கி முன்னேறிச்செல்ல முடியும்..

க.பிறட்லி

## நகைச்சுவைத் துணுக்குகள்




- **நீதிபதி:-** "ஒலிம்பிக் தீபத்தை தூக்கிக்கொண்டு, ஓடிவந்தவர்களை நீ வழிமறித்து விட்டாயாமே, அது உண்மையா?"

  **குற்றவாளி:-** "அட நீங்கவேறு பீடிக்கு நெருப்பு கேட்கலாம் என்றுதான் போனேன். தப்பாய் நினைச்சு இழுத்திட்டு வந்திட்டாங்க"

- **ஒரு பெண்:-** "பாட்டி! எதற்கு உங்கட பேத்தி சங்கீத வகுப்புக்கு கலர் பெட்டி, கலர் பென்சில் என்று கொண்டு போகிறா?"

  **பாட்டி:-** இன்றைக்கு "வர்ணம்" சொல்லி கொடுக்கினமாம்.

- **ஆசிரியர்:-** "மழை அதிகமாக உள்ள நாடுகளில் எதை அதிகம் உற்பத்தி செய்கிறார்கள்?"

  **மாணவன்:-** "குடைகளையும்,...மழைக் கோட்டுகளையும் சேர்"

அலிஸ்


"தூது" காலாண்டு சஞ்சிகையின் அடுத்த தூதுரைப்புக்கான உங்கள் கட்டுரைகள், கவிதைகள், அறிவியல் தொகுப்பு போன்ற அனைத்து ஆக்கங்களையும் எதிர்பார்க்கின்றோம்.

- கிறிஸ்தவ விழுமியங்கள் இளையோடும், ஆன்மீக விழிப்பூட்டும் அம்சங்களாகவோ,
- கல்வி, கலை, கலாச்சாரங்களை உள்ளடக்கியதாகவோ,
- கிறிஸ்தவ பாரம்பரிய மரபுவழி இருப்புக்களை மீட்டுவதாகவோ,
- அடுத்த காலாண்டுப் பகுதிக்குரிய முக்கிய கிறிஸ்தவ தினங்கள் சார்ந்ததாகவோ,

அமையுமாறு உங்கள் ஆக்கங்களை ஆக்ஸ்ட் 31ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வையுங்கள்

"தூது" பரவ உங்கள் ஆலோசனைகள் கருத்துக்களை எம்முடன பகிர்ந்து கொள்ளுங்கள்.

"தூது"
28/2, சென். பெனடிக்ற் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
தோ.பே: 021-2228135
மின்னஞ்சல் முகவரி: **thuuthu2006yahoo.com**


"மனிதராய்ப் பிறந்தவர்களுள் யோவானை
விடப் பெரியவர் ஒருவருமில்லை" (லூக்.7:28)
"தூது"
28/2, சென்: பெனடிக்ற் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்,
இலங்கை.
தனிப் பிரதி 25/=
ஆண்டுச்சந்தா
உள்நாட்டில் 130/=
வெளிநாட்டில் 6$